கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

**2014/2015 (ஜூன் 2017)**

**TLS 4113** சங்கக் கவிதைகளும் கவிதையியலும்

நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

---

1. சங்க நூல்கள் எனப்படுபவை யாவை ? 19ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் அவற்றைப் பதிப்பிப்பதில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றி எடுத்துக்கூறுக.
(25 புள்ளிகள்)

2. திணைக்கோட்பாடு என்றால் என்ன என எடுத்துக்கூறி, அகத்திணைக் கோட்பாட்டுக்கும் அன்றைய வாழ்க்கைச் சூழலுக்குமுள்ள தொடர்பினை எடுத்துக்காட்டுக.
(25 புள்ளிகள்)

3. புறத்திணைபற்றித் தொல்காப்பியர் கூறியவற்றை எடுத்துக்கூறி, அவை புறப்பொருள் வெண்பாமாலையிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக.
(25 புள்ளிகள்)

4. “சங்க இலக்கியப் புறத்திணைப் பாடல்களின் திணை,துறைகள் அக்கால சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கின்றன,” வேந்தர்பாடிய பாடல்களை உதாரணமாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.
(25 புள்ளிகள்)

5. ஆற்றுப்படை என்றால் என்ன என எடுத்துக்கூறி, சங்க இலக்கியத்துக்குள்ளேயே அது தனி இலக்கிய வகையாக மாறிய நிலையைத் தெளிவுபடுத்துக.
(25 புள்ளிகள்)

6. ‘ஏனைய சங்க இலக்கிய நூல்களை விட கலித்தொகை வேறுபட்டமைந்திருக்கிறது,’ இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுக.
(25 புள்ளிகள்)